மெட்ரோ ரெயில் நிலையங்களில் இருந்து இயக்கப்பட்ட

# ஷேர் ஆட்டோ, டாக்சியில் 4 லட்சம் பேர் பயணம்

சென்னை, ஆக.10–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் 7 மெட்ரோ ரெயில் நிலையங்களில் ஷேர் ஆட்டோ மற்றும் ஷேர் டாக்சி சேவைகளை அறிமுகப்படுத்தியது.

ஷேர் டாக்சியில் 3 கி.மீ. தூரம் வரை பயணம் செய்ய ரூ.10 கட்டணமும், ஷேர் ஆட்டோவில் ரூ.3 கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. இதுவரை சுமார் 4 லட்சத்து 40 ஆயிரம் பயணிகள் ஷேர் ஆட்டோ மற்றும் டாக்சியில் பயணம் செய்துள்ளனர். கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் 44 ஆயிரத்து 974 பேர் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

மேலும் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் கூடுதல் வசதியாக, தனியார் நிறுவனத்துடன் இணைந்து டாக்சி இணைப்பு சேவையை 6 மெட்ரோ ரெயில் நிலையங்களில் கடந்த 5–ந் தேதி முதல் தொடங்கியுள்ளது.

இந்த டாக்சி இணைப்பு சேவை ஒவ்வொரு ரெயில் நிலையத்தில் இருந்தும் 6 முதல் 8 கி.மீ வரை செயல்படும். இதில் பயணம் செய்ய ரூ.10 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. மேலும் மீதியுள்ள மெட்ரோ ரெயில் நிலையங்களுக்கு இந்த வசதி விரைவில் விரிவுப்படுத்தப்படும் என சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.